# வாக்குமூலம்
# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்
# வழக்கு எண்: CC – 12 /2021

## வழக்கு சாட்சி :PW3(LW3)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஆசைதம்பி | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | ஆறுமுகம் | தொழில் | : | எலக்ட்ரீசன் |
| கிராமம் | : | பெருமாநாடு | சமயம் | : | |
| தாலுக்கா | | | வயது | : | 35 |

(எதிரி ஆஜர் இல்லை .எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

Solemnly affirmed in accordance with the Indian Oaths Act–1969 Section –6(2) on the day 25th day of March 2025.

சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார் – (சாட்சி அவர் கூறும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யும் போது அவர் உடனுக்குடன் பார்க்கும் விதமாக அவர் முன்பாக ஒரு கணினி திரை வைக்கப்பட்டுள்ளது).

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது பெருமாநாட்டில் குடியிருந்து வந்து எலக்ட்ரீசன் வேலை செய்து வருகிறேன். கடந்த 02.06.2020 ம் தேதி மாலை 04.15 மணியளவில் பெருமாநாடு கீழத் தெருவில் உள்ள எனது வீட்டின் அருகில் உள்ள டீ கடையில் டீ குடித்துக் கொண்டிருந்தேன். அப்போது குடுமியான்மலை ரோட்டில், குடுமியான்மலையில் இருந்து புதுக்கோட்டை நோக்கி ஒரு கார் வேகமாக வந்து எனது அண்ணன் மகள் யோகிதா என்பவர் மீது மோதியது. யோகிதா அவரது ஆயா வீட்டிற்கு சென்று சாலையை குறுக்காக கடக்கும் போது இந்த விபத்து நடந்தது. உடனே நானும், அம்பிகாவதி என்பவரும் யோகிதாவை எங்களது தம்பியின் இரு சக்கர வாகனத்தில்ர தூக்கி கொண்டு புதுக்கோட்டை அரசு மருததுவ கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். விபத்து ஏற்படுத்திய கார் அங்கு நின்று கொண்டிருந்தது. நாங்கள் விபத்து ஏறப்பட்டவுடனே யோகிதாவை எடுத்துக் கொண்டு மருத்துவமனைக்கு சென்று விட்டதால் கார் ஓட்டிய நபரை நான் பார்க்கவில்லை. அவர் ஓட்டி வந்த வாகன எண் அவரது பெயர் விவரமும் எனக்கு தெரியாது. யோகிதாவை மருத்துவமனைக்கு அழைத்து சென்று மருத்துவரிடம் காட்டிய போது அவர் இறந்து விட்டதாக கூறினார். போலிசார் என்னை விசாரித்தனர்.

**<u>எ.த.கு.வி</u>**

1. வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும், நான் டீ குடித்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் இடையே சுமார் எவ்வளவு துாரம் இருக்கும் என்றால் 50 மீட்டர் துாரம் இருக்கும். வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடமும், நான் டீ குடித்த இடமும் மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதி என்றாலும் வாகனங்கள் அதிகம்

செல்லக்கூடிய பகுதி என்றாலும் சரிதான். குடுமியான்மலை to புதுக்கோட்டை சாலை மாநில நெடுஞ்சாலை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் குடுமியான்மலை to புதுககோட்டையை நோக்கி கார் சென்றதாக கூறியுள்ள விவரத்தை தான் போலிஸ் விசாரணையிலும் குறிப்பிட்டேன் என்றால் சரிதான் .எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் விபத்தில் ஈடுபட்டதாக சொல்லக்கூடிய வாகனம் எது, வாகன எண், வாகனத்தின் ஓட்டுநர் யார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்ற விவரத்தை போலிசார் என்னை விசாரிக்கும் போது சொன்னேன் என்றால் சரிதான்.

2. விபத்து நடந்ததாக சொல்லக்கூடிய இடத்தில் என்னை தவிர, எத்தனை நபர்கள் இருந்திருப்பார்கள் என்றால் 7,8 நபர்கள் இருந்ததிருப்பார்கள். மேற்சொன்ன குழந்தை யோகிதாவிற்கு அடிப்பட்ட விவரத்தை நான் மருத்துவமனைக்கு சென்ற பிறகு தான் அவரது பெற்றோர்களுக்கும், அவரது ஆயா திருமாயி என்பவருக்கும் , எனது சகோதரி பரமேஷ்வரி என்பவருக்கும் தகவல் சொல்லி அதன் பிறகு தான் அவர்கள் மருத்துவமனைக்கு குழந்தையை பார்க்க வந்தார்கள் என்றால் சரிதான். யோகிதாவின் பெற்றோர்கள் , மற்றும் மேற்சொன்ன பரமேஷ்வரி ஆகீயோர்கள் எந்த ஊர் என்றால் யோகிதாவின் பெற்றோர்கள் பெருமாநாட்டை சேர்ந்தவர்கள் , பரமேஷ்வரி என்பவர் பொன்னம்பட்டியில் திருமணம் செய்து அங்கு கணவருடன் வசித்து வருகிறார் . நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ளவாறு வழக்கு சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றாலும், இறந்து போன குழந்தை எனது அண்ணன் மகள் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.